# வணிகக்கல்வி

## அகச்சூழல்



Start Your Learning Journey with e-thaksalawa
The National e-learning Portal for The General Education

1.7 வணிகத்தின் அகச்சூழல் காரணிகள் வணிகங்களில் ஏற்படுத்தும் தாக்கத்தைப் பகுப்பாய்வு செய்வார்.

**பாடசாலையொன்றின் அகச்சூழல் காரணிகள்**

⇒ பாடசாலை ஒன்றின் அன்றாடக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்துவதும் அப்பாடசாலையினுள் காணப்படுவதுமான காரணிகளும் அவ்வொவ்வொரு காரணிகளும் பாடசாலை நடவடிக்கைகளில் நேரானதாகவும் எதிர்மறையானதாகவும் தாக்கம் செலுத்தும் முறைகளும் கீழே தரப்படுகின்றது.

| காரணிகள் | நேரான தாக்கம் | எதிரான தாக்கம் |
|---|---|---|
| 1. மாணவர்கள் | • கீழ்படிந்து நடத்தல்<br>• திறன்களைப் பூரணமாகக் கொண்டிருத்தல் | • மனப்பாங்கை கற்றலுக்கெதிராகக் கொண்டிருத்தல்<br>• பின்னடைவைப் பெற்றிருத்தல் |
| 2. ஆசிரியர்கள் | • உயர்கல்வித் தகைமையினைப் பெற்றிருத்தல்<br>• கற்பிக்கும் திறனைக் கொண்டிருத்தல்<br>• மனிதநேயம் கொண்டிருத்தல் | • தேவையான அளவு ஆசிரியர்கள் காணப்படாமை<br>• பொறுப்பு, வகைகூறலை ஏற்காமை<br>• அர்பணிப்புக் குறைவாக காணப்படல்<br>• குறைவான பயிற்சி |
| 3. வகுப்பறையின் இட வசதி | • மகிழ்ச்சிகரமான சூழல் அமைந்திருத்தல்<br>• தேவையான அளவு இடவசதிகள் காணப்படல்<br>• வசதிகளைக் கொண்டிருத்தல் | • பழுதடைந்த தளபாடங்களும் வகுப்பறைகளும்<br>• போதுமான இடவசதி காணப்படாமை<br>• போதிய காற்றோட்டமின்மை |
| 4. மாணவத் தலைவர்கள் | • சிறப்பான ஆளுமையைக் கொண்டிருத்தல்<br>• திறன்களை முழுமையாகப் பெற்றிருத்தல்<br>• சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய திறன் | • கவனயீனமாக இருத்தல்<br>• பொறுப்புக்களை ஏற்காமை |
| 5. பாடசாலைக் கலாச்சாரம் | • பாடசாலை பாரம்பரியங்களைப் பின்பற்றல்<br>• பாடசாலை ஒழுக்க விதிகளுக்குக் கட்டுப்படுத்தல் | • பாடசாலை கலாச்சாரத்திற்கு முரண்பாடாக நடத்தல்<br>• பாடசாலை ஒழுக்க விதிகளைப் பின்பற்றாமை |



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

⇒ இவ்வாறு பாடசாலையொன்றின் கருமங்களில் நேரான எதிரான தாக்கங்களை ஏற்படுத்தும் அகச்சூழல் காரணிகள் காணப்படுவதோடு அக்காரணிகளினால் ஏற்படுகின்ற நேர்தாக்கங்கள் **பலம்** எனவும், எதிரான தாக்கங்கள் **பலவீனம்** எனவும் குறிப்பிடப்படும்

## வணிகத்தின் அகச்சூழல் காரணிகள் / விசைகள்

### உரிமையாளர்

வணிகத்திற்கு வளங்களை வழங்கியுள்ள அல்லது நிதியினை முதலீடு செய்திருக்கும் இலாபம் அல்லது நட்டத்தை ஏற்கும் பிரிவினர் ஆவார்.

### பலங்கள்

- கூடுதலானோர் காணப்படல்.
- அவர்களிடம் நிதிப்பலம் அதிகரித்தல்.
- அவர்களின் அறிவும் அனுபவமும் அதிகரித்தல்.



### பலவீனங்கள்

- குறைவான தொகையினர்.
- நிதிப்பலம் குறைவாக இருத்தல்.
- அறிவும் திறனும் குறைவாக இருத்தல்.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

### முகாமையாளர்

வணிகத்திட்டங்களைத் தயாரித்தல், தீர்மானமெடுத்தல் என்பனவற்றை மேற்கொள்ளும் பிரிவினர் ஆவார்.

**பலங்கள்**

- பயிற்சியும் அனுபவமும் அதிகரித்தல்.
- சரியான தீர்மானம் எடுக்கும் ஆற்றல்.



**பலவீனங்கள்**

- பயிற்சியும் அனுபவமும் குறைவடைதல்.
- தீர்மானமெடுப்பதில் பின்னடைவு.
- பிழையான தீர்மானமெடுத்தல்.

### ஊழியர்கள்

உயர் முகாமையாளரால் தயாரிக்கப்படும் திட்டங்கள் மற்றும் தீர்மானங்களுக்கமைய கீழ் மட்டத்தில் குறிப்பிட்ட கருமங்களில் ஈடுபடும் பிரிவினர்கள் ஆவார்.

**பலங்கள்**

- திறமையான அனுபவமுள்ள ஊழியர்கள் காணப்படல்.
- பல்வேறு திறன்களைக் கொண்டிருத்தல்.
- சிறந்த மானப்பாங்கு காணப்படல்.
- ஊக்கமுள்ள ஊழியர்கள் காணப்படல்.



**பலவீனங்கள்**

- பயிற்சியற்ற ஊழியர்கள் காணப்படல்.
- பொறுப்பு, வகைகூறல் அற்ற ஊழியர்கள் காணப்படல்.
- எதிரான மனப்பாங்கினைக் கொண்டிருத்தல்.
- வினைத்திறனற்ற ஊழியர்கள் காணப்படல்.

தொகுப்பு :- , ஆசிரியர்- (வணிகக்கல்வி )( )

கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிளா, ஆசிரியர் - (த.தொ.தொ) (வ/முதலியார்குளம் றோ.க.த.க.பாடசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## நிறுவனக்கலாச்சாரம்

வணிகத்தில் காணப்படும் அனைவரிடமும் பகிர்ந்தளிக்கப்படுவதும் அடுத்துவரும் சந்ததியினருக்கு ஒப்படைக்கப்படும் நம்பிக்கைகள், பெறுமதிகள், மனப்பாங்குகள், பழக்கவழக்கங்கள், நடத்தை முறைகள், முன்மாதிரிகள் என்பன நிறுவனக் கலாச்சாரம் எனப்படும்.

### பலங்கள்

- நேரான மதிப்பீடு மற்றும் நேரான முறைமையும் காணப்படல்.
- அதற்கேயுரிய விருத்தியடைந்த நடத்தை, ஒழுக்கம் மற்றும் பழக்க வழக்கங்கள் காணப்படல்.



### பலவீனங்கள்

- நேர்மதிப்பீடும் நேரான முறைமை, நடத்தை, ஒழுக்கம் என்பன காணப்படாமை.
- உயர் மேற்பார்வை காணப்படாமை.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## நிறுவனக்கட்டமைப்பு

நிறுவனத்தின் நோக்கத்தினை இலகுவாக அடைந்து கொள்ளக்கூடியவாறு அமைப்பின் கருமங்கள், வளங்கள், அதிகாரம் என்பன பிரிந்து செல்லும் முறை நிறுவனக்கட்டமைப்பு எனப்படும்.

### பலங்கள்



- பொருத்தமானவாறு வேலைகளைப் பகிர்ந்தளித்தல்
- பொருத்தமானவாறு ஒழுங்கமைப்பை கட்டியெழுப்புதல்.

### பலவீனங்கள்

- வகிபாகங்களுக்கிடையே மோதல் உருவாதல்.
- பிரிவுகளுக்கடையே சிறந்த இணைப்புக் காணப்படாமை.

## வளங்கள்

பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதற்காக உள்ளீடுகளாகப் பயன்படுத்தப்படுகின்ற நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சியாண்மை, காலம், தகவல்கள், அறிவு போன்றன அனைத்தும் வளங்களாகும்.

### பலங்கள்



- தேவையான அளவு காணப்படல்.
- தரமானதாக காணப்படல்.

### பலவீனங்கள்

- காலங்கடந்த வளங்கள் காணப்படல்.
- வளங்களின் அருமைத்தன்மை (பற்றாக்குறை).
- தேவையானளவு வளங்கள் காணப்படாமை.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## செயற்பாடு 01

வணிகச் சூழலானது அகச்சூழல், புறச்சூழல் என இருவகைப்படும். உமது பிரதேசத்தில் காணப்படும் வணிக நிறுவனம் ஒன்றைக் கருத்திற் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?

1. அந் நிறுவனத்தின் அகச்சூழல் காரணிகளை அட்டவணைப்படுத்துக?
2. அக்காரணிகளில் நிறுவனத்திற்கு பலமாக இருக்கின்ற அகச்சுசூழல் காரணிகளை கண்டறிந்து அவற்றின் பலங்களை குறிப்பிடுக?
3. குறித்த நிறுவனத்திற்கு பலவீனமான அகச்சூழல் காரணிகளை இனங்கண்டு அவற்றின் பலவீனங்களை குறிப்பிடுக?
4. நிறுவனத்தில் காணப்படுகின்ற பலவீனங்களை நீக்குவதற்கு உங்களது ஆலோசனைகளை முன்வைக்க?





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பயிற்சி வினாக்கள்

பின்வரும் அட்டவணையானது தனியுடைமை வியாபார நடவடிக்கைகள் மீது தாக்கம் செலுத்தும் சில உள்ளக விசைகளையும் பலங்களையும் எடுத்துக்காட்டுகின்றது.

| உள்ளக விசை | பலங்கள் |
|---|---|
| A - நிறுவனக்கட்டமைப்பு | 1. அனுபவம் |
| B - உரிமையாளர் | 2. இற்றைவரைத்தன்மை |
| C - ஊழியர்கள் | 3. நன்மதிப்பு |
| D - பாவனையிலுள்ள வளங்கள் | 4. இலகு தீர்மானம் எடுத்தல் |

மேலே தரப்பட்ட அட்டவனையை கருத்திற்கொண்டு உள்ளக விசைகளுக்கும் பலங்களுக்கும் மிகவும் பொருந்தக்கூடிய சரியான தொகுதியைத் தெரிவு செய்க?

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| 1. | 1 | 2 | 4 | 3 |
| 2. | 4 | 2 | 3 | 1 |
| 3. | 4 | 3 | 1 | 2 |
| 4. | 3 | 4 | 2 | 1 |
| 5. | 2 | 1 | 3 | 4 |




Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பின்வருவன வணிகம் ஒன்று தொடர்பான சூழல்சார் காரணிகளது சில போக்குகள் ஆகும்.

A. பொருளாதார விலை மட்டத்தில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு
B. தொழில் தருனர் - தொழில் பெறுநர் முரண்பாடுகளில் அதிகரிப்பு
C. போட்டியில் அதிகரிப்பு
D. தொழில் பெறுநர் திரும்பலில் குறைவு
E. நிறுத்தி வைத்த உழைப்புக்களில் குறைவு
F. நுகர்வோர் சங்கங்களின் பலத்தில் அதிகரிப்பு
G. மூலப்பொருட்கள் வீணாக்குவதில் குறைவு
H. வயது முதிர்ந்தோர் சனத்தொகையில் அதிகரிப்பு

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் அகச்சூழல் காரணிகளின் போக்குகளை மட்டும் கொண்டுள்ள தொகுதி யாது?

1. A, B, C, D 2. A, D, E, G 3. B, C, E, H 4. B, D, E, G 5. C, F, G, H

வணிகமொன்றின் அகச்சூழலில் “பலம்” என்பதனை தோற்றுவிக்கக்கூடிய ஒழுக்கநெறியாகக் கருதக்கூடியது

1. சமூகமட்ட நிகழ்வுகளுக்கு அனுசரனை வழங்குதல்
2. சகல ஊழியர்களையும் சமமாக நடாத்துதல்
3. சமயக் குறியீடுகளை வணிக நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தாதிருத்தல்
4. முதியோருக்கு மரியாதை செய்தல்
5. விளம்பரப்படுத்தலின் போது ஏனைய வணிகங்களின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தாதிருத்தல்





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பின்வரும் அட்டவணையானது தனியுடைமை வியாபார நடவடிக்கைகள் மீது தாக்கம் செலுத்தும் சில உள்ளக விசைகளையும் பலங்களையும் எடுத்துக்காட்டுகின்றது.

| | உள்ளக விசை | | பலங்கள் |
|---|---|---|---|
| A | நிறுவன கலாச்சாரம் | 1. | தூர நோக்கு |
| B | முகாமையாளர் | 2. | இலக்கினை அடைவதற்கு உதவுதல் |
| C | உரிமையாளர் | 3. | உயர்தரத்துடன் இருத்தல் |
| D | வளங்கள் | 4. | அர்பணிப்புடன் செயற்படல் |

மேலே தரப்பட்ட அட்டவணையை கருத்திற் கொண்டு உள்ளக விசைகளுக்கும் பலங்களுக்கும் மிகவும் பொருந்தக்கூடிய சரியான தொகுதியை தெரிவு செய்க?

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| 1. | 4 | 2 | 1 | 3 |
| 2. | 2 | 1 | 4 | 3 |
| 3. | 2 | 4 | 1 | 3 |
| 4. | 2 | 1 | 4 | 3 |
| 5. | 3 | 1 | 4 | 2 |



Copyright



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

- வணிகச் செயற்பாடுகளின் போது நிறுவனங்களால் கட்டுப்படுத்தக்கூடிய சூழல் காரணிகள் **அகச்சூழல்** காரணிகள் எனப்படும்.

- வணிகத்திற்கு வளங்களை வழங்கியுள்ள பிரிவினர் **உரிமையாளர்** என அழைக்கப்படுவர்.

- வணிகத்தில் காணப்படும் அனைவரிடமும் பகிர்ந்தளிக்கப்படுவதும் அடுத்துவரும் சந்ததியினருக்கு ஒப்படைக்கப்படும் நம்பிக்கைகள் பெறுமதிகள், மனப்பாங்குகள் என்பன நிறுவனக்கலாச்சாரம் எனப்படும்.

- பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படுபவை அனைத்தும் **வளங்கள்** எனப்படும்.

- பயிற்சியற்ற, பொறுப்பற்ற ஊழியர்கள் காணப்படல் வணிகத்திற்கு **பலவீனம்** ஆகும்

- வணிகத்திற்கு தேவையான வளங்கள் தரமானதாகக் காணப்படல் **பலம்** ஆகும்.

Copyright ©



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk